RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1722



OPEN ACCESS

# ‘வலசை’ புதினத்தின்வழி முதுவர் இனமக்களின் இயற்கைசார் வாழ்வியல்

**க. சத்யஜோதி** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா

# The Natural Life of the People of Mudhuvar Ethnic Community through the novel 'Valasai (Animal Migration)'

**K. Sathya Jothi** [a, *]

[a] Centre of Tamil Research, Lady Doak college, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: sathyajothi@ldc.edu.in

Received: 18-03-2022
Revised: 14-10-2022
Accepted: 30-10-2022
Published: 17-12-2022

**ABSTRACT**

Tamil literature of this period plays a major role in speaking of the current scenario. In that sense, it can be said that there is no equivalent to novels in telling contemporary social problems and their solutions. No wonder today's Tamil novels are mirrors of time. Among such novels is Su. Venugopal's novel 'Valasai' is one of them. The novel speaks of the problems of the life of elephants; And as another storyline, it also talks about the life of the tribal people, the Mudhuvars. The novel reveals that the Mudhuvars have their own unique way of life and that they are ecologically concerned. This article shows how the way of life of the Mudhuvars revealed by the novel 'Valasai' is naturalistic. This paper describes the way in which natural life manifests itself in elements such as food, shelter, harmony with elephants, and practical recreation of the Mudhuvars.

**Keywords:** Mudhuvar Community, Valasai Novel, Tribe Lifestyle, Social Problems.

## முன்னுரை

இன்றைய நவநாகரிக மனிதரின் வாழ்வு, இயற்கைக்கு அப்பால் வெகுதூரம் சென்றுவிட்டது. இன்னும் ஆழநோக்கின், இயற்கையைச் சுரண்டியே வாழப் பழகிவிட்டனர் என்றே கூறலாம். இதற்கு மாறாக பழங்குடிகளின் வாழ்வானது, சூழலியல் தார்மீகத்துடன் இருப்பதைக் காணமுடிகின்றது. இயற்கையன்னையின் வளங்கள் யாவும், அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவையே என்பதைப் பழங்குடி மாந்தர்கள் ஆழமாக நம்புகின்றனர் (Anandakumar, 2022). இதன் காரணமாகவே அவர்களுடைய வாழ்வியல் முறைமைகளும், இயற்கையை முதன்மைப்படுத்தும் விதத்தில் இருக்கின்றன. அத்தகைய பழங்குடிகளுள், முதுவர் இனமக்கள் முக்கியமானவர்கள். இம்மக்களுக்கென்று தனித்த ஒழுகலாறுகள், பண்பாட்டுக்கூறுகள், வாழ்வியல் விழுமியங்கள் உள்ளன. இதனை சு.வேணுகோபாலின் ‘வலசை’ புதினம் இயல்பாகப் புலப்படுத்துகின்றது. இப்புதினத்தில், முதுவர் இனமக்களின் அடிப்படைத் தேவைகள், தொழில், மருத்துவம், இன்னபிற வாழ்வியல் கூறுகள் யாவும் இயற்கையை அடியொற்றியே அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. அவ்வாறு, இப்புதினம் வெளிப்படுத்தும் முதுவர் இனத்தாரின் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் கூறுகளை ஆய்ந்து எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது.

## இயற்கையும் வாழ்க்கையும்

காலம் காலமாக, தமிழ் இலக்கியங்கள் யாவும் தமிழர் வாழ்வை இயற்கையோடு இணைத்தே பாடுகின்றன. குறிப்பாக, சங்க இலக்கியங்களில் இத்தாக்கத்தை அறியமுடியும். தலைவன் தலைவியின் காதல், கற்பு வாழ்க்கை, ஐந்திணையின் முதல், கரு மற்றும் உரிப்பொருட்கள் என அனைத்திலும் இயற்கையைப் போற்றியே பழந்தமிழ்ப்புலவர்கள் பாடியுள்ளனர். அவ்வகையில், சங்க இலக்கியங்கள் இயற்கை அழகியல் என்ற நோக்கில் விரிவடைகின்றன. ஐந்திணைக்கு உரிய கருப்பொருட்கள் பட்டியலைக் காணும் பொழுதே தமிழர்களின் இயற்கை உற்றுநோக்கலைக் கணிக்கமுடியும். அதைப்போலவே கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் 99 வகை மலர்கள் குறிப்பினைக் கண்டு மலைக்காதவர் எவரும் இல்லை என்றே கூறலாம். ஆகவே மனிதவாழ்வியலில் இருந்து இயற்கையைப் பிரிக்கமுடியாது என்பதை மறுக்கமுடியாது. அவ்வாறே, குறிஞ்சிநில மக்களாம் முதுவர் இனத்தவர்களின் வாழ்வு, சிறந்த இயற்கைசார் வாழ்வாக அமைகின்றது என்பதை இக்கட்டுரை பதிவுசெய்கின்றது. அவர்களுடைய உணவு, இருப்பிடம், தொழில், மருத்துவம், பொழுதுபோக்கு, புழங்குபொருட்கள் ஆகிய அனைத்திலும் இயற்கைச்சிந்தனை மேலோங்கி நிற்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

## முதுவர் இனமக்கள்

தமிழகப் பழங்குடிகளின் பட்டியலில் முதுவர் இனமக்கள் முதுவர், முதுவன், முத்துவன் என, மூன்று பெயர்களில் குறிப்பிடப் பட்டுள்ளதாக 'தமிழகப் பழங்குடிகள்' நூலில் பக்தவத்சலபாரதி கூறியுள்ளார். முதுவர்கள், கேரளத்தின் இடுக்கி மாவட்டத்தில் 87 இடங்களிலும், தமிழகத்தில் ஆனைமலை, ஏலமலை, மதுரை மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். 'பாண்டி யநாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலின் காரணமாக, முதுகில் தங்கள் குழந்தைகளைச் சுமந்து சென்றதால் 'முதுவர்' எனப் பெயர் பெற்றதாக அறியமுடிகின்றது. முதுவர்கள் இன உயர்வுவாதம் உடையவர்கள் எனப் பக்தவத்சலபாரதி கூறுகின்றார். "முதுவர்கள் வேறு எந்தச் சமூகத்தாரும் தங்களோடு இணையாக அமர்ந்து உண்ணவோ, குடிக்கவோ, புகைக்கவோ தகுதியற்றவர்கள் என எண்ணுகின்றனர் (Bhakthavatsala Bharathi, 2018)." முதுவர் இனத்தாரின் பேச்சுவழக்கு, தமிழும் மலையாளமும் கலந்ததாகவே உள்ளது. இதனை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட புதினத்திலும் காணமுடிகின்றது. சிலப்பதிகாரத்தில் 'முதுகுடிப்பிறந்தோன்' என்ற சொல்லாடலை வைத்து முதுவர்கள் பாண்டியநாட்டைப் பூர்விகமாகக் கொண்டவர்கள் என்று கூறுவாரும் உளர். எனவே, இத்தகு பழம்பெரும் இனத்தவர்கள் தமிழர்களே என்பதை அறியமுடியும். முதுவர்கள் தனித்த பழக்கவழக்கங்கள் உடையவர்களாக உள்ளனர். இவர்களில் மணமாகாதவர் இளையோர்மடங்களில் தங்குவர். இதனை, "முதுவர்களிடம், திருமணமாகாதவர் தங்கிவாழும் இளையோர்கூடங்கள் உண்டு. ஆண்கள் இளந்தாரிமடத்திலும், பெண்கள் குமரிமடத்திலும் தங்குவர் எனப் பதிவுசெய்துள்ளார் (Bhakthavatsala Bharathi, 2018). இனி, 'வலசை' புதினத்தில் இம்மக்களின் தனித்த வாழ்வியல் முறைமைகளில் இயற்கைசார் கூறுகள் இடம்பெறும் நிலையைக் காணலாம்.

## உணவு

விருந்தோம்பல், தமிழரின் மிக முக்கியப் பண்பாடு ஆகும். இதன் காரணமாகவே, இலக்கியங்கள் உணவு பற்றிய குறிப்புகள் பலவற்றையும் விவரிக்கின்றன. இன்றைய 'பிரியாணி' என்னும் உணவுவகையை 'ஊன்துவை அடிசில்' என்ற பெயரில் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்து புலப்படுத்துகின்றது. அவ்வாறு நோக்கின், உணவின் வரலாறு மிக நீண்டதாகும். அதன்படி, 'வலசை' புதினம், முதுவர் இனமக்களின் உணவுவகைகளையும் உணவுமுறைகளையும் வெளிப்படுத்துகின்றது. புதினத்தில், முதுவர் இனத்தவரான மாசய்யா தாத்தா, சுகுமாருக்குத் தின்பண்டம் தருகின்றார். இப்பண்டத்தை, "தாழம் இலையால் சுற்றிய பொட்டணத்தை எடுத்துத் தந்தார். தகரக்கீரையிட்டு வதக்கிய பெரிய காளான் பண்டம் இருந்தது." என்று ஆசிரியர் பதிவு செய்கின்றார் (Venugopal, 2018). அதைப்போலவே முதுவர்களின் இரவு உணவினையும் புதினத்தில் காணமுடிகின்றது. "வாழை

இலையில் குதிரைவாலிச் சோறை அள்ளி வைத்தனர். பிரண்டைக்குழம்பின் வாசம் எச்சிலை ஊறச் செய்தது.” மலைவாழ் மக்களின் முக்கிய உணவு, தேனும் கிழங்கும் ஆகும். மேலும், குறிஞ்சிநிலத்திற்கே உரிய சிறப்பான உணவுவகைகள் இவை என்பதை அறியலாம் (Venugopal, 2018). ‘வலசை’ புதினத்தில் சிலுமன் முதுவருக்கு முள்ளிவள்ளிக் கிழங்கு விருந்து நிகழ்த்தப்படுகின்றது. அதற்காகத் தேனையும் கிழங்கையும் தேடியெடுத்து வருகின்றனர். கிழங்குகளை வேகவைத்து, மலைத்தேனை நிரம்ப ஊற்றி உண்கின்றனர் முதுவர்கள். “இலை நிறையத் தேன்கிழங்குத் துண்டங்கள்...அவசரத்தில் அந்த அமிர்தத்தை அரைகுறையாக மென்று விழுங்கினேன்.” என்று கூறுவதாக அமைந்துள்ளது (Venugopal, 2018).

மேற்கண்ட வரிகளில், முதுவர்களின் உணவுவகைகள் யாவும் இயற்கைச் சார்ந்து இருப்பதை உணரமுடியும். இயற்கைசார் உணவுகளே நலம் பயக்கும் என்பதையறிந்த இம்மக்கள், சூழலியலுக்கு உகந்த உணவுமுறைகளைக் கொண்டுள்ளனர் என்பதைப் புதினத்தின்வழி உணரமுடிகின்றது. வாழை மற்றும் தாழம் இலைகளைப் பயன்படுத்துதல், ஆரோக்கிய உணவுகளை மட்டும் உண்ணுதல் என முதுவர்கள் இயற்கைசார் உணவுமுறையைப் பின்பற்றுதலை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

## உறைவிடம்

அனைத்து உயிர்களுக்கும் பொதுவான தேவைகளுள் உறைவிடமும் ஒன்று. இதனைக் கருத்தில் கொண்டே ‘எலிவளையானாலும் தனிவளை வேண்டும்’ என்னும் முதுமொழியை ஆன்றோர் கூறியுள்ளனர். ‘வலசை’ புதினத்தில் முதுவர் இனமக்களின் தனித்த மற்றும் எளிமையான வீடமைப்பினை ஆசிரியர் தம் கூற்றின் வழிப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். “சின்னச்சின்னக் குடிசைகள். கல்லும் மண்ணும் வைத்துக் கட்டிய சிறு சுவர்கள். போதைப்புல் வேய்ந்த கூரைகள். ஒரு குடிசையின் முன் உட்காருவதற்குத் தோதாக கல்மேல் வைத்த பலகை. அதற்கு சிறுபந்தல் குடிசை வீடுகளுக்கு மலையில் விளைகின்ற புற்களைப் பயன்படுத்துகின்றனர் முதுவர் இனத்தவர். மேலும் “பலருக்கு ஒற்றைக் கல் வீடுகள்தான் இன்னமும். சாமன முதுவரின் வீடு சற்றுப் பெரியது. மூங்கில் தடுக்கால் ஆன முழங்கால் உயரப் பரண். நல்ல கூரை விட்டம் இருக்கிறது. பின் சுவர் ஓரம் மழைநீர் சேறாதபடி தருவைப்புல் வேய்ந்த கூரை இருக்கிறது. கூரையின் முன்னால் புல்லால் பின்னிய வனதேவதை கொஞ்சம் குனிந்து மலையைப் பார்க்கிறது. இங்கு வாழும் அனைத்து மக்களின் குடிசைகளிலும் புல்லால் வேய்ந்த வனதேவதை பொம்மை ஒன்று இடம்பெறுகின்றது. வனதேவதையே தம்மைக் காக்கும் தெய்வமாக எண்ணி, இம்மக்கள் வீடமைப்பில் இத்தகைய முறைமைகளைப் பின்பற்றுகின்றனர். எளிமையான வீடுகளாயினும், சூழலியலுக்கு உகந்த வீடுகள் இவை. தங்கள் வாழ்வியல் முறைக்கு ஏற்ப, இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி வீடமைத்து இருப்பதை ஆசிரியர் இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார் (Venugopal, 2018).

## தொழில்

மனிதவாழ்வில் தொழில்களுக்கு முக்கிய இடம் உண்டு. இன்றைய சாதியமைப்பின் ஆணிவேராகத் தொழில்களே அமைந்திருக்கின்றன. இத்தொழில்களைக் குறிப்பிட்ட இயற்கை நிலஅமைப்பிற்கு ஏற்ப, மக்கள் செய்வதைத் தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் தெளிவாகப் பதிவுசெய்துள்ளன. அவ்வாறு பார்க்கும் பொழுது ‘வலசை’ புதினத்தில் மலைவாழ் மக்களான முதுவர் இனமக்கள், சமவெளி மக்களிடம் விவசாயக் கூலிகளாகவும் அவர்கள் கால்நடைகளை மேய்ப்பவர்களாகவும் உள்ளனர். விவசாயக்கூலி வேலையில் இணக்கமான நிலையை, “மலையடிவார மேட்டாங்காடுகளுக்கு முதுவர்கள்தான் வருகிறார்கள். அவர்களுக்கு சம்சாரிகள் கொடுக்கிற கூலிதான். கூலி போதவில்லையென்றோ, வரமாட்டேன் என்றோ சொல்ல மாட்டார்கள்” என்பதிலிருந்து அறியமுடிகிறது. மேலும் விளைநிலங்கள் உருவாக்கலில் முதுவர்களின் பங்களிப்பை, “நிலம் இல்லாதவர்கள் எல்லாம் அடிவாரம் வந்து புனக்காடு உருவாக்கியிருக்கிறார்கள் (Venugopal, 2018). விவசாய வேலைகளுக்கு முதுவர்கள் வராத காலம் என்றாலும் புனக்காடு உருவாக்குவதற்கு வந்திருக்கிறார்கள்.” என்பதிலிருந்து உணரமுடிகின்றது. இதைத்தவிர சமவெளி மக்களுக்குக்

கால்நடைகள் மேய்க்கும் பணியினையும் செய்கின்றனர். “ஊர்க்காலி மாடுகளை மாற்றாள் வைத்து வனத்தில் மேய்த்தனர். மாதத்திற்கு ஒருநாள் ஒருவர் மாட்டின் பின்னால் மேய்க்கப் போனார்கள். அடிவாரத்தில் கிடைபோட்டு மேய்க்கிறார்கள். கன்று ஈன்றால் பாலுக்குப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.” மலையில் வாழும் இம்மக்கள் தற்காலத்திலும் வேறுதொழில்களை நாடிச் செல்வதில்லை. இங்கு, முதுவர்களின் இயற்கைச்சூழல், அவர்களின் வாழ்வாதாரத்திற்குச் சமவெளி மக்களைச் சார்ந்திருக்க வைத்திருக்கின்றது. எவ்வாறாயினும் முதுவர்களின் தொழில்கள் யாவும் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு என இயற்கையோடு ஒன்றிய விதத்திலேயே அமைந்திருப்பதை அறியலாம் (Venugopal, 2018).

## மருத்துவம்

மலைவாழ் மக்களுக்கே உரிய தனித்த சிறப்புக்கூறுகளுள் மருத்துவமும் ஒன்று. இம்மக்கள், இயற்கை மருத்துவம் என்னும் கலையைத் தங்கள் பாரம்பரிய அறிவின்வழி இன்றளவும் பாதுகாத்து வருகின்றனர். அவ்வாறு, முதுவர் இனமக்களின் தொன்மையான மருத்துவமுறையை ‘வலசை’ புதினத்தில் ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார். கதையின் நாயகன் சுகுமாருக்கு விஷப்பூச்சிக்கடியால் தீராத நோய் ஏற்படுகின்றது. இதற்கு உரிய மருத்துவம் கிடையாது என மருத்துவர்கள் கைவிட, இறுதியில் முதுவரின் இயற்கை மருத்துவத்தை நாடுகிறார். “தும்பைச் செடியின் இலைகளைக் கல்லில் அரைத்தாள் சாமன முதுவரின் மூத்த மருமகள் அரைத்த மருந்தை தென்னஞ் சிரட்டையில் வழித்து அள்ளிப் போட்டுக்கொண்டு வந்து தந்தார். அதனுடன் ஆட்டுப்பாலைக் கலக்கிக் குடிக்கக் கொடுத்தார்.” இம்மூலிகை மருந்தினை ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுப் பூரண குணமடையும் நிலையைக் காணமுடிகின்றது. அதனைப் போலவே, கள்ளிச்செடியின் முள் குத்தியதால் ஏற்படும் கீறல்களுக்கு எளிமையான மருத்துவமுறையைப் பின்பற்றுகின்றனர். “வனச்செல்வி, தோல் கீறி வடியும் ரத்தத்தைத் துடைத்துவிட்டு மொசக்கொட்டைப் பாலை அதில் தொட்டுத் தொட்டு வைத்தாள். ஊறுகிற ரத்தம் உடனே நின்றது. தோல்கூட ஓரிரவிற்குள் ஒட்டிவிடுமாம்.” இவ்வாறு உண்டாகும் கீறலைக் குழந்தைகளே சரிசெய்துகொள்கின்றனர் (Venugopal, 2018).

மேற்கூறியுள்ள மூலிகை மருந்துகள் யாவும் இயல்பாகக் கிடைக்கக் கூடியவை. அவற்றின் பயனறிந்து, முதுவர்கள் தங்கள் நடைமுறை வாழ்வில் பயன்படுத்தி நலம்பெறுகின்றனர். இயற்கை மருந்தே இனிய மருந்து என்பதை முதுவர்கள் கொள்கையாகக் கொண்டிருப்பதைப் புதினத்தின்வழி அறியமுடிகின்றது.

## பொழுதுபோக்கு

மனிதர்கள், தங்களின் அன்றாடப் பணிகளுக்குப்பின் ஓய்வுநேரத்தைச் செலவழிக்க எண்ணியபொழுதே பொழுதுபோக்கு உருவானது. இன்றைய காலத்தில் பொழுதுபோக்கு, தொலைக்காட்சி பார்ப்பதிலும் அலைபேசி பயன்பாட்டிலும் சுருங்கிவிட்டதை மறுக்கமுடியாது. ஆனால், முதுவரினத்தாரின் பொழுது போக்குக் கூறுகள் யாவும் இயற்கையுடன் இயைந்து இருக்கின்றன. ‘வலசை’ புதினத்தில் முதுவரினக் குழந்தைகளின் பொழுது போக்குகளைக் காணலாம். இக்குழந்தைகளின் முக்கிய விளையாட்டுகளாக முயல் வேட்டைக்குச் செல்லுதல், தேனெடுத்தல், மற்றும் நீராடுதலைக் கூறலாம். காலையில் முயல்வேட்டைக்குச் செல்ல, சிறுவர்சிறுமியர் ஒன்றுசேர்ந்து ஆயத்தமாகின்றனர். “சிறுவர்கள் ஒன்றுசேர்ந்து முயல்வேட்டைக்குப் போகலாம் என்று கவட்டை, வில், தடி, ஈட்டியை எடுத்துக்கொண்டு திரண்டார்கள்”. இவர்கள் வேட்டைக்கு எடுத்துச்செல்லும் ஆயுதங்கள் அனைத்தும் இயற்கைசார் பொருட்களே ஆகும். அவ்வாறு வேட்டைக்குச் சென்ற இடத்தில் தற்செயலாகத் தேன்கூட்டைக் காண்கின்றனர். உடனே இத்தேனை எடுப்பதற்குக் குழந்தைகள், மூங்கில் ஏணியை அவ்விடத்திலேயே உருவாக்குகின்றனர். “ஓடைக்குள் இறங்கி ஓரளவு வளையாது ஓங்கி உயர்ந்து முற்றி நிற்கும் பச்சை மூங்கிலை வெட்டிச் சாய்த்தனர். ஒவ்வொரு கணுவின் இருபுறம் கிளைத்து விரிந்த மிளார்களில் அரைமுழம் விட்டு வெட்டப் படியாக மாறின.”

இவ்வாறு நாற்படியில் ஒற்றை மூங்கில் ஏணியைக் குழந்தைகளே உருவாக்குவது வியப்பிற்குரியது. அவ்வாறு ஏணியமைத்தபின் தேனெடுக்க விளைகின்றனர். "பாறையின் அடியில் உயரத்தில் தேனடை தொங்கிக் கொண்டிருந்தது. எல்லோரும் சேர்ந்து ஒற்றை மூங்கில் ஏணியைத் தூக்கி தேனடைக்கு நேர் அடியில் கொண்டுசென்றனர்." தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஒற்றை மூங்கில் ஏணியில் துளியும் பயமின்றி இக்குழந்தைகள் ஏறுகின்றனர் (Venugopal, 2018).

தேனை எடுக்கும் சிறார்கள், அதனை மூங்கில் குடுவையில் சேமிக்கின்றனர். "வெம்பிளியன் சுரைக்குடுக்கையை வேண்டாம் என்று சொல்லிவிட்டு மூங்கில் குடுவையை நெஞ்சுபக்கம் தொங்கவிட்டான்." இங்கு, முதுவர் இனக்குழந்தைகள், தேன் எடுப்பதற்கு மூங்கில் ஏணி, மூங்கில் குடுவை என முழுவதும் மூங்கில் மரத்தையே பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. மலைக்காடுகளில் மூங்கில் மரங்களின் வளர்ச்சி அதிகம் என்பதால், அவற்றின் பயன்பாடுகளும் அதிகமாக இருப்பதை 'வலசை' புதினத்தின்வழி அறியலாம். மேலும் முதுவரினக் குழந்தைகளும் இவ்வாறு இயற்கையோடு சார்ந்தியங்குவது இங்கு நோக்கத்தக்கது (Venugopal, 2018).

தேனெடுத்து வரும் பிள்ளைகள், பெரிய நீர்மடுவினைப் பார்க்கின்றனர். உடனே ஆர்வத்தில் நீராட எண்ணுகின்றனர். இதனை, "பாறையிலிருந்து சற்று மேலேறவும் பெரிய நீர்மடு வந்தது, அதைப் பார்த்ததும் பிள்ளைகள் குதித்தனர். கொண்டுவந்த ஆயுதங்களையும் கூடைகளையும் அவசரஅவசரமாக பாறைமேல் வைத்துவிட்டுக் குளிக்க ஆயத்தமானார்கள்' ஆசிரியர் புதினத்தில் குறிப்பிடுகின்றார் (Venugopal, 2018). அவ்வாறு குளிக்கும்பொழுதே உப்புத்தேக்கி வேரைக் கண்டு அதன் உப்புச்சுவைக்காக சுவைக்கின்றனர். பின்பு மலையில் பூக்கின்ற மலர்களைச் சிறுவர்சிறுமியர் பாகுபாடில்லாமல் அனைவரும் சூடி மகிழ்கின்றனர். இவ்வாறு முதுவரினக் குழந்தைகளின் அன்றாட வாழ்வியல்முறை அமைந்துள்ளது. இக்குழந்தைகள் இயற்கையைச் சார்ந்தே வாழப்பழகுகின்றனர். இத்தகைய பொழுதுபோக்குக் கூறுகளின்வழி மலைவாழ் குழந்தைகளுக்கே உரிய ஆர்வத்தையும், துணிவையும் இவற்றிற்குக் காரணமாக விளங்கும் இயற்கையறிவையும் ஒருங்கே காணலாம்.

## முள்ளிவள்ளி கிழங்கு விருந்து

'வலசை' புதினத்தில் சு. வேணுகோபால், முதுவர்களின் 'முள்ளிவள்ளி கிழங்கு விருந்து' பற்றி யதார்த்தமாகச் சித்திரிக்கிறார். முதுவர் இனத்தவரான சிலுமன் தாத்தா, தான் இவ்வளவு ஆண்டுகாலம் இக்குடியை வழிநடத்திச் சென்றுள்ளமையால், தனக்கு முள்ளிவள்ளி கிழங்கு விருந்து வேண்டும் என்று தன் மக்களிடம் விரும்பிக் கேட்கின்றார். இவ்வாறு தனிநபருக்கு எவ்வாறு திடீரென்று விருந்து நிகழ்த்துவது என முதுவர்கள் தயங்க, அச்சமயத்தில் பூப்பெய்திய பெண்ணிற்கும் சேர்த்து இவ்விருந்தினை வைத்துவிடலாம் என்று தீர்மானிக்கின்றனர். உடனே முதுவக்குடியின் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் முள்ளிவள்ளி கிழங்குகளையும் தேனையும் சேகரிக்கத் தொடங்குகின்றனர். "பொழுது இறங்கிய நேரத்தில் கிழங்கு மூட்டைகளையும் தேன் அடுக்குகளையும் சுமந்துகொண்டு வந்தார்கள். மண்வாசமும் இலைதழைகளின் வாசமும் கிழங்கு வாசமும் தேன் வாசமும் கலந்து அவர்களினூடே வந்து மூக்கைத் துளைத்தது." இக்கிழங்குகளை வேகவைக்கின்ற சமயத்தில் நெருப்பினைச் சுற்றி ஆண்களும் பெண்களும் நடனமாடுவதைப் புதினத்தில் காணமுடிகின்றது. "களத்தின் மத்தியில் செந்தீ நெளிந்து அசைகிறது. இசை முழங்க ஆண்களும் பெண்களும் ஆடிக்கொண்டிருந்தனர். காற்று வீசும்போது மரமசைவதைப் போலவும், கனிகள் உதிர்வது போலவும், அள்ளுவது போலவும் ஆடினர்." இம்மக்கள் இயற்கையுடன் ஒன்றியே வாழப்பழகியவர்கள் என்பதால் இவர்களுடைய நடன அசைவுகளிலும் இயற்கையைச் சார்ந்திருப்பதை இங்கு அறியமுடிகின்றது (Venugopal, 2018).

காடமர்செல்வி கோவிலின் முன் விருந்து வைக்கின்றனர். அக்கோவிலுக்கு முதுவரினப் பெண்கள், பூப்பெய்திய பெண்ணை அழைத்துவந்து பாடுகின்றனர்.

"செழித்த கிழங்கும் கொழுத்த தினையும் பெருக

காட்டின் மகள் கதவுகளைத் திறக்க

மேடும் கோடும் பூத்துக் குலுங்குக.”

இப்பாடலின் வழியே காட்டு வளங்கள் யாவும் பெருகவேண்டும் என்றெண்ணிப் பாடுகின்றனர். இவ்வாறு முதுவர்கள் சூழலியல் அக்கறை கொண்டவர்களாக இருப்பதை அறியலாம். மேலும் இவ்விருந்தின் வழியே முதுவர் இனமக்களின் இயற்கையுடனான கலைநயத்தையும் உற்றுநோக்கலையும் ஒருங்கே காணலாம் (Venugopal, 2018).

## புழங்குபொருட்கள்

நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்ற பொருட்களையே புழங்குபொருட்கள் எனக் கூறலாம். இப்புழங்குபொருட்களின் வழியே குறிப்பிட்ட இனக்குழுவினை அடையாளம் காண இயலும். புழங்குபொருட்களே சமூகத்தின் பண்பாட்டு நிலையைத் தெரிவிக்கும் சின்னங்களாக விளங்குகின்றன. ‘வலசை’ புதினத்தில் காணப்படும் முதுவர் இனத்தாரின் புழங்குபொருட்கள் அனைத்தும் இயற்கை சார்ந்தே விளங்குகின்றன. சான்றாக, அம்மிக்கல்லைக் குறிப்பிடுகையில், “அது கொத்தி சதுரித்த அம்மிக்கல் அல்ல. சதுரமான கருங்கல் அது. அரைத்து அரைத்து அம்மியாகிவிட்டது.’ எனக் கூறப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள், தங்கள் அன்றாடப் பயன்பாட்டிற்கு இயற்கை பொருட்களைப் பயன்படுத்துவதில் வியப்பேதும் இல்லை.

இன்று குடிநீரைப் பிளாஸ்டிக் குப்பிகளில் மக்கள் பயன்படுத்துகின்றனர். ஆனால் முதுவர்களோ, “சுரைக்குடுவையில் இருந்து நீரைப் பருகினர். இதைத்தவிர இம்மக்களின் வீட்டில் இயல்பாக இருக்கக்கூடிய பொருட்களையும் காணலாம். “தினைகள் நிரப்பாத வெற்றுக் குளுக்கைகள் இருக்கின்றன. தினை போட்டுக் குற்ற மிகப் பழமையான குந்தாணி இருக்கிறது. சிறு பாறைக் கல்லிலான அம்மி இருக்கிறது. சிறுமுரசும் புல்லாங்குழலும் இருக்கின்றன. தேன் வைக்க மூங்கில் குடுவை இருக்கிறது.’ சுற்றுச்சூழலுக்கு ஏற்ற இயற்கைசார் பொருட்களை மட்டும் பயன்படுத்துகின்றனர் முதுவர்கள். தங்களைச் சுற்றியுள்ள இயற்கைவளங்களை நன்மையளிக்கும் விதத்தில் இம்மக்கள் பயன்படுத்துவதைப் புதினத்தில் இயல்புறக் காணலாம் (Venugopal, 2018).

## யானைகளிடம் இணக்கம் காட்டும் முதுவக்குடி

குறிஞ்சி நிலத்திற்கே உரிய விலங்குகளுள் யானை முக்கியமானது. யானைகள் வாழும் மலைகளிலேயே முதுவர் இனமக்களும் வசிக்கின்றனர். ‘வலசை’ புதினத்தில் முதுவர்களின் வாழ்விடத்திற்கு அண்மையிலேயே யானைகளின் வழிப்பாதைகளும் அமைந்திருப்பதை அறியலாம். இவ்வளவு நெருக்கமாக இம்மக்களின் வசிப்பிடம் அமைந்திருந்தாலும் முதுவரின மக்களை யானைகள் ஒருபோதும் தாக்கியதில்லை. அதனை இப்புதினத்தில், ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார். முதுவர்களின் குடியிருப்பிற்குப் பின்னால் இருக்கின்ற மலைச்சரிவிலிருந்து யானைகள் ஏறி இக்குடில்களுக்கு எதிர்பாராத விதமாக வந்துவிடுகின்றன. இவ்வாறு வரும் யானைகளின் பிளிறலைக் கேட்ட கைக்குழந்தையொன்று மிரண்டு அழுகின்றது. அக்குழந்தையின் அருகில் வரும் யானைகள், இக்குழந்தையை ஒன்றும் செய்யாமல் அதனைத் தூக்கி வேறொரு இடத்தில் வைத்துவிட்டுச் செல்கின்றன. இதனை “ஒரு கணம் தான், கத்தும் குழந்தையைச் சிறு பூங்கொத்தைத் தூக்குவதுபோல யானை துதிக்கையால் தூக்கியது மூத்த யானை அலாக்காகத் தூக்கி வந்து சிறு பாறை மேட்டில் வைத்துவிட்டுச் சென்றது.” என்று கூறுகிறார் (Venugopal, 2018). சமவெளி மக்களிடம் மூர்க்கக்குணத்தைக் காட்டும் இந்த யானைகள், மலைவாழ் மக்களிடம் மட்டும் ஏன் இத்தகைய இணக்கமான நிலையை வெளிப்படுத்துகின்றன என்னும் வினாவிற்கு உரிய விடையைப் புதினத்திலேயே காணமுடிகின்றது. “யானை வழித்தடத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தள்ளிதான் முதுவர்கள் காலம்காலமாகக் குடியிருக்கிறார்கள். அவர்களைத் தூரத்தில் நின்று பார்த்து விட்டுத்தான் கடக்கின்றன. அவர்களும் ஒன்றும் செய்வதில்லை. அதுகளும் ஒன்றும் செய்வதில்லை. அவர்களுக்குள் சொல்லப்படாத பந்தம் நிலவுகிறது. ஒருவருக்கொருவர் பார்வையால் சுமுகம் காட்டிக் கொள்கிறார்கள்.” இவ்வாறு, யானைகளைச் சமஉயிரென எண்ணி முதுவர்கள் வாழ்வதன் காரணத்தினாலேயே, அவற்றால்

இம்மக்களுக்குப் பிரச்சினைகள் ஏதும் இல்லை என்கிறார் ஆசிரியர். இங்கு, முதுவர்கள், காட்டுயிரான யானைகளுடன் காட்டும் இணக்கநிலையைக் கூறுவதன் மூலம் இவர்களின் இயற்கைசார் வாழ்வு வெளிப்படுகின்றது (Venugopal, 2018).

## முடிவுரை

பழங்குடிகளின் வாழ்வே நிலைத்த வாழ்வு என்பது அனைவரும் அறிந்ததுவே. எனினும் அத்தகைய வாழ்வியலை நடைமுறையில் செயலாற்றப் பலருக்கும் மனம் மறுக்கின்றது. இன்றைய சூழலியல் அச்சுறுத்தல்களுக்குத் தீர்வாக இயற்கைக்குத் திரும்புதலைப் பலரும் பேசுகின்றனர். அத்தகைய இயற்கைசார் வாழ்வையே வழக்கமாக கொண்டிருக்கின்றனர் முதுவர் இனமக்கள். இவர்களின் அடிப்படைத் தேவைகள், பிற வாழ்வாதாரங்கள் என அனைத்திலும் இயற்கையை மூலாதாரமாகக் கொண்டே செயல்படுகின்றனர் என்பதை ‘வலசை’ புதினத்தின் வழி இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## References


Bhakthavatsala Bharathi, (2018) Tamilga Palangudikal, Adaiyalam veeliyedu, Tirchy, India.

Venugopal, S. (2018) Valasai, Tamilini Pathippagam, Chennai, India.

Anandakumar, S. (2022) Need to Know the Tribes of Tamil Nadu, International Research Journal of Tamil, 4(SPL 2), 329-332. https://doi.org/10.34256/irjt22s251



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License